

பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் ஆகியோர் மாவட்டக் கழக செயலாளர்கள் திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ், 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன், வடக்கு மாநகர செயலாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார் முன்னிலையில் வளர்மதி பாலம் அருகில் நெடுஞ்சாலைத் துறையின் சார்பில் ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அவிநாசி திருப்பூர் பல்லடம் பொள்ளாச்சி கொச்சின் வழி மீன்கரை சுரங்கப்பாலம் கட்டுதல் பணியினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர். இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், நெடுஞ்சாலைத்துறை தலைமை பொறியாளர் சந்திரசேகர், நெடுஞ்சாலைத்துறை கண்காணிப்பு பொறியாளர் சரவணன் உள்பட பலர் உள்ளனர்.

### தஞ்சாவூர் மாவட்டம் - திருவையாறு ஒன்றியம்

# ஒரத்தூர் ஊராட்சியில் பல்வேறு மருத்துவக் கட்டிடங்கள்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைத்தார்!

தஞ்சை, ஜூன் 20 -

தஞ்சாவூர் மாவட்டம் திருவையாறு பூதலூர் ஊராட்சி ஒன்றியம் ஒரத்தூர் ஊராட்சியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் பல்வேறு புதிய கட்டடங்களை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மாவட்ட ஆட்சித் தலைவர் தீபக் ஜேக்கப், தலைமையில் தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி, சட்டமன்ற உறுப்பினர்கள் துரை சந்திரசேகரன் (திருவையாறு), கா.அண்ணாதுரை (பட்டுக்கோட்டை) முன்னிலை யில் நேற்று முன்தினம் (18.6.2024) திறந்து வைத்தார்கள்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்ததாவது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க தஞ்சாவூர் மாவட்டம் திருவையாறு வட்டம் பூதலூர் ஊராட்சி ஒன்றியம் ஒரத்தூர் ஊராட்சியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் ரூ.1.35 கோடி மதிப்பில் திருவையாறு தொகுதி ஒரத்தூர் ஊராட்சியில் ரூ.30 இலட்சம் மதிப்பில் நலவாழ்வு மைய புதிய கட்டடமும், ரூ.50 இலட்சம் மதிப்பில் பேராவூரணி தொகுதி செறுவாவிடுதி ஊராட்சியில் வட்டார பொதுசுகாதார அலகு மற்றும் ரூ.25 இலட்சம் மதிப்பில் கழனிக்கோட்டை ஊராட்சியில் துணை சுகாதார நிலையமும் ரூ.30 இலட்சம் மதிப்பில் பட்டுக்கோட்டை தொகுதி பள்ளிகொண்டான் ஊராட்சி துணை சுகாதார நிலையம் என மொத்தம் ரூ.1.35 கோடி மதிப்பில் பல்வேறு புதிய சுகாதார நிலைய கட்டடங்கள் மக்கள் பயன்பாட்டிற்கு இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து, தஞ்சாவூர் மாவட்டம் அரசு மருத்துவக்கல்லூரியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் ரூ.42 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த புற்றுநோய் சிகிச்சை மைய கட்டடமும், ரூ.20 கோடி மதிப்பீட்டில் 50 படுக்கைகள் கொண்ட அதிதீவிர சிகிச்சை பிரிவு கட்டட கட்டுமான பணி நடைபெற்று வருவதையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது. பொதுமக்களின் பயன்பாட்டிற்கு விரைவில் திறந்து வைக்கப்படும். அதே போல் திருக்கானூர் பட்டியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் ஊரக வளர்ச்சித் துறையுடன் இணைந்து தேசிய நெடுஞ்சாலைகளில் ஏற்படும் விபத் பத்துக்களுக்கான சிகிச்சை அளிக்கும் விதமாக தஞ்சாவூர் - புதுக்கோட்டை தேசிய நெடு ஞ்சாலையில் உள்ள திருக்கானூர்பட்டி ஊராட்சியில் ரூ.4 கோடியே 4 இலட்சம் மதிப்பீட்டில் அவசர கால தீவிர விபத்து சிகிச்சை மையம் அமைக்கப்பட உள்ளது.

இத்திட்டத்தின் மூலமாக தேசிய நெடுஞ்சாலைகளில் ஏற்படும் உயிரிழப்புகள் தடுக்கப்படுவதுடன் விபத்து ஏற்பட்டவர்களை மருத்துவமனைக்கு கொண்டு செல்வதற்கான காலதாமதங்கள் தவிர்க்கப்பட்டு உரிய நேரத்தில் சிகிச்சை பெற இத்திட்டம் வழிவகுக்கும்.

மேலும், தஞ்சாவூர் மாவட்டத்தில் தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் ரூ.2.89 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்ட மருந்தாக்கியல் துறை கட்டடமும், கும்பகோணம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் ரூ.4 கோடி மதிப்பீட்டில் நோயாளிகள் காத்திருப்பு அறையும், ரூ.33.60 இலட்சம் மதிப்பீட்டில் கட்டண சிகிச்சை பிரிவு விரைவில் திற க்கப்பட்டு ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் MRI ஸ்கேன் கட்டட பணிகள் தொடங்கப்பட உள்ளது. அதே போல் பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனையில் புதிய மகப்பேறு கட்டடமும் விரைவில் திறக்க ப்படும் போன்ற 31 பல்வேறு புதிய மருத்துவ கட்டடங்கள் ரூ.37.85 கோடி செலவில் நடைபெற்று வருகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அரசு பொறுப்பேற்ற பிறகு தஞ்சாவூர் மாவட்டத்தில், ரூ.73.09 கோடி செலவில், 6 துணை சுகாதார நிலையங்கள், 5 ஆரம்ப சுகாதார நிலையங்களில் பொது சுகாதார அலகு, செவிலியர் குடியிருப்பு, ஓமியோபதி பிரிவு மற்றும் கூடுதல் பிரிவு மற்றும் 5 அரசு மருத்துவமனைகளில் (பட்டுக்கோட்டை, கும்பகோணம், பாபநாசம், ஒரத்தநாடு, பூதலூர்) பல்வேறு மருத்துவ பிரிவுகள் மற்றும் அதிநவீன மருத்துவ உபகரணங்கள் தொடங்கி வைக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

மக்களை தேடி மருத்துவம் திட்டத்தின் மூலம் இதுவரை 1 கோடியே 70 ஆயிரம் பேர் பயனடைந்துள்ளனர். இன்னுயிர் காப்போம், நம்மை காக்கும் 48 திட்டத்தின் மூலம் இதுவரை 2 லட்சத்து 56 ஆயிரம் பேர் பயனடைந்துள்ளனர். சென்னை எழும்பூரில் உள்ளது போல் தஞ்சையிலும் குழந்தைகள் நல மருத்துவமனை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில் மாநகராட்சி மேயர் சண் இராமநாதன் , உதவி ஆட்சியர் (பயிற்சி) உத்கர்ஷ் குமார், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் பாலகணபதி , மாவட்ட ஊராட்சி தலைவர் திருமதி. உஷா புண்ணியமூர்த்தி அவர்கள், மாநகராட்சி துணை மேயர் மரு. அஞ்சுகம் பூபதி, தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.ஆர். பாலாஜி நாதன், தஞ்சாவூர் வருவாய் கோட்டாட்சியர் திருமதி.இலக்கியா, துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) மரு.கலைவாணி, ஒன்றியக் குழுத் தலைவர் ச.அரங்கநாதன் (எ) கல்லணை செல்லக்கண்ணு (பூதலூர்), வட்டார மருத்துவ அலுவலர் மரு.சுந்தரம் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மீஞ்சூர் மு. கேசவன்

### ஜூன் 20 (2019)



கழகம் துவங்கிய காலத்திலேயே, கொள்கையில் ஈடுபாடு கொண்டு, பொன்னேரி வட்டத்தில் கழகத்தை துவங்கியவர்.

பொன்னேரி வட்டக் கழகச் செயலாளராக மூன்று முறையும், பொதுக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.

இந்தி எதிர்ப்பு போராட்டம் போன்ற மும்முனைப் போராட்டத்திலும், கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு பல முறை சிறை சென்றவர்.

நெருக்கடிகால மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## திருவேற்காடு நகரத்தில் சசிகாந்த் செந்தில் வாக்காளர்களுக்கு நன்றி!

சென்னை, ஜூன் 20 –

நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் திருவள்ளூர் (தனி) தொகுதியில் போட்டியிட்ட சசிகாந்த் செந்தில் அதிக வாக்கு வித்தியாசத் தில் வெற்றி பெற செய்த வாக்காளர்களுக்கு திருவள்ளூர் மத்திய மாவட்ட திருவேற்காடு நகரத்தில் முழுவதும் முன்னாள் அமைச்சரும் மாவட்ட கழகச் செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ. தலைமை யில் நகரச் செயலாளர் என்.இ.கே.மூர்த்தி ஏற்பாட்டில் நன்றி தெரிவித்தார்.

உடன் மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் பிரபு கஜேந்திரன், ஆவடி மாநகர பொறுப்பாளர் சன்.பிரகாஷ், நிர்வாகிகள் பெஞ்சமின், ஜெ.சரவணன், பானு அரசு, செல்லதுரை, கப்பல் கே.சுரேஷ் குமார், பரிசமுத்து, பி.உமாபதி, எம். காந்தி, துரைகோபால், தெய்வ சிகாமணி, கே.பி.எஸ்.சுதாகர், பிரதானம், கெஜா, ரங்கதுரை, சத்தியகிரி, பன்னீர் செல்வம், ஜெகன், சாது, பி.வி.கே.கண்ணன், விநாயகம், டி.பிரியாகுமார், அக்னிராஜேஷ், ஜேக்கப், என்.ராஜி, அப்பு, நாராயணன், நரேஷ், நித்திய, ரஜினி, ஆசைதம்பி, சாந்தி ராஜா, உள்பட பலர் உள்ளனர்

## பூவிருந்தவல்லியில் ஆ.கிருஷ்ணசாமி பொதுமக்களிடம் கோரிக்கை மனுபெற்றார்!

திருவள்ளூர், ஜூன் 20 –

திருவள்ளூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் ஜமாபந்தி நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் பூவிருந்த வல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி கலந்துகொண்டு பூவிருந்தவல்லி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருவள்ளூர் ஒன்றியத்தில் உள்ள பல்வேறுகிராமங்களை சேர்ந்தவர்களிடமிருந்து குறைகளைக் கேட்டறிந்தார்.

மனுக்களை பெற்றுக் கொண்டு சம்பந்தப்பட்ட அதிகாரி யிடம் வழங்கி உடனடியாக பட்டா ரேஷன் கார்டு முதியோர் தொகை பல்வேறு பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

உடன் வருவாய் கோட்டாட்சியர் கற்பகம், திருவள்ளூர் வட்டாட்சியர் வாசுதேவன், திருவள்ளூர் தி.மு.க. ஒன்றிய செயலாளர் ஆர்.ஜெயசீலன், ஒன்றிய குழு துணைத் தலைவர் பர்கத்துல்லா கான், பொதுக்குழு உறுப்பினர் த.எத்திராஜ், நிர்வாகிகள் கே.கே.சொக்கலிங்கம், டி.கே.சீனிவாசன், த.சுகுமார், முரளி கிருஷ்ணன், கே.சரவணன், அயலூர் வெங்க டேசன் உள்பட பலர் உள்ளனர்.

### முத்தமிழறிஞர் கலைஞரின் 'இராமானுஜர்' தொலைக்காட்சித் தொடர் நூலாக்கம்!

# சமயங்களும், சமயநெறிகளும் மானுடத்தை மேம்படுத்த வழிகாட்டட்டும்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப்பதிவு!

சென்னை, ஜூன் 19

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் எழுதிய"இராமானுஜர் - மதத்தில் புரட்சி செய்த மகான்"எனும் தொலைக்காட்சித் தொடர் நூலாக்கம் செய்யப்பட்டு இந்து சமய அறநிலைத் துறை சார்பில் நூலாக வெளியிடப்பட்டது.

இது தொடர்பாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப்பதிவில், "சமயங்களும், சமய நெறிகளும் மானுடத்தை மேம்படுத்த வழிகாட்டட்டும்!" என்று குறிப்பிட்டுள்ளார்.

முதல்வர் அவர்களின் வலைதளப் பதிவு வருமாறு:-

**அடித்தட்டு மக்களுக்கு மாண்புப் பெயர்கள் சூட்டிச் சுயமரியாதையைக் காத்த இராமானுஜரின் காவியத்தை "மதத்தில் புரட்சி செய்த மகான்" எனத் தனது நிறைவுக்கால படைப்பாக வழங்கினார் முத்தமிழறிஞர் கலைஞர்.**

**சாதியால் ஒடுக்கப்பட்ட மக்களை அரவணைத்துக் கோயில் நுழைவு செய்து கோயிலினுள் தமிழ் மந்திரங்களை ஓங்கி ஒலிக்கச் செய்த இராமானுஜரின் வாழ்வுதன்னை, முத்தமிழறிஞர் கலைஞரின் எழுத்துகளில் உங்கள் கைகளுக்குப் புத்தகமாக வழங்குகிறோம்.**

**சமயங்களும் சமய நெறிகளும் மானுடத்தை மேம்படுத்த, ஒற்றுமையை வளர்க்க, ஏற்றத்தாழ்வுகளை நீக்க வழிகாட்டட்டும்! பொலிக! பொலிக!**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### வேலூர் நாடாளுமன்றத் தொகுதியில்

# டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கிறார்!



மதச்சார்பற்ற முற்போக்கு இந்தியா கூட்டணியின் சார்பில் போட்டியிட்டு வேலூர் நாடாளுமன்றத் தொகுதியில் வெற்றி பெற்றுள்ள டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. கீழ்க்கண்ட நிகழ்ச்சி நிரலின்படி வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்க உள்ளார்.

**20.6.2024 - ஆம்பூர் சட்டமன்றத் தொகுதி மாதனூர் கிழக்கு ஒன்றியம்**

| நேரம் | கலந்துகொள்ளும் ஊராட்சிகள் |
|---|---|
| காலை 8.20 மணி | திருமலைகுப்பம் |
| காலை 8.40 மணி | பாலூர் |
| காலை 9.00 மணி | மாதனூர் |
| காலை 9.20 மணி | தோட்டாளம் |
| காலை 9.40 மணி | குளிதிகை ஜமீன் |
| காலை 10.00 மணி | வெங்கிரி |
| காலை 10.20 மணி | கீழ்முருங்கை |
| காலை 10.40 மணி | வடபுதுப்பட்டு |
| காலை 11.00 மணி | சோலூர் |
| காலை 11.20 மணி | பெரியாங்குப்பம் |
| காலை 11.40 மணி | நாச்சார் குப்பம் |
| பகல் 12.00 மணி | கென்னடி குப்பம் |
| பகல் 12.20 மணி | ஆலங்குப்பம் |
| பகல் 12.40 மணி | விண்ணமங்கலம் |
| பகல் 1.00 மணி | மின்னூர் |
| பகல் 1.20 மணி | செங்கிலிகுப்பம் |
| பகல் 1.30 மணி | மாராப்பட்டு |
| பகல் 2.00 மணி | நாய்க்கனேரி |

| நேரம் | இடம் | கலந்துகொள்ளும் ஊராட்சிகள் |
|---|---|---|
| **20.6.2024 -ஆம்பூர் சட்டமன்ற தொகுதி ஆம்பூர் நகரம்** | | |
| மாலை 4.00 மணி | மளிகை தோப்பு | வார்டு 1, 2, 15, 16 |
| மாலை 5.00 மணி | கஸ்பா -எ மந்தகரை | வார்டு 4, 5, 6 |
| மாலை 5.30 மணி | கஸ்பா - B காதர்பேட்டை | வார்டு 12, 13,22 |
| மாலை 6.00 மணி | V.A. கரீம் ரோடு | வார்டு 20,23, 24 |
| மாலை 6.30 மணி | எல்லையம்மன் கோயில் கிருஷ்ணாபுரம் | வார்டு 17, 18, 19 |
| மாலை7.00 மணி | விநாயகர் கோயில் அருகில் பை-பாஸ் சாலை | வார்டு 35, 36 |
| மாலை 7.30 மணி | SK ரோடு சாணாங்குப்பம் | வார்டு 32, 33, 34, 27 |
| மாலை 8.00 மணி | ரெட்டி தோப்பு | வார்டு 28, 29, 30, 31 |
| மாலை 8.30 மணி | புதுமனை | வார்டு 8, 9 |
| **21.6.2024 -ஆம்பூர் சட்டமன்ற தொகுதி மாதனூர் மேற்கு ஒன்றியம்** | | |
| காலை 8.30 மணி | ஊராட்சிமன்ற அலுவலகம் எதிரில் | மேல்குப்பம் |
| காலை 8.45 மணி | ஊராட்சிமன்ற அலுவலகம் எதிரில் | பாப்பனப்பள்ளி |
| காலை 9.00 மணி | அரசமரம் நூலகம் எதிரில் | வடச்சேரி |
| காலை 9.15 மணி | பழைய தி.மு.க. அலுவலகம் எதிரில் | சின்ன பள்ளி குப்பம் |
| காலை 9.45 மணி | RI கோட்ரஸ் எதிரில் | எம்.எஸ்.குப்பம் |
| காலை 10.00 மணி | ஊராட்சிமன்ற அலுவலகம் எதிரில் | வடகரை |
| காலை 10.15 மணி | பஸ் நிலையம் எதிரில் | வீராங்குப்பம் |
| காலை 10.30 மணி | பஸ் நிலையம் எதிரில் | தென்னம்பட்டு |
| காலை 11.00 மணி | பஸ் நிலையம் எதிரில் | மலையாம்பட்டு |
| காலை 11.15 மணி | பஸ் நிலையம் எதிரில் | அரங்கல்துருகம் |
| காலை 11.30 மணி | பஸ் நிலையம் எதிரில் | கதவாளம் |
| காலை 11.45 மணி | ராமர் கோயில் அருகில் | பார்சனாப்பள்ளி |
| காலை 12.00 மணி | ஊராட்சிமன்ற அலுவலகம் எதிரில் | மோதகப்பள்ளி |
| பகல் 12.15 மணி | பஸ் நிலையம் எதிரில் | குமாரமங்கலம் |
| பகல் 12.30 மணி | பஸ் நிலையம் எதிரில் | கம்மகிருஷ்ணபள்ளி |
| பகல் 12.45 மணி | பஸ் நிலையம் எதிரில் | கரும்பூர் |
| பகல் 1.15 மணி | பஸ் நிலையம் எதிரில் | வெங்கடசமுத்திரம் |
| பகல் 1.45 மணி | கூட்ரோடு பஸ் நிலையம் | மிட்டாளம் |
| **21.6.2024 - குடியாத்தம் சட்டமன்ற தொகுதி மாதனூர் மத்திய ஒன்றியம்** | | |
| மாலை 4.00 மணி | தேவலாபுரம் | பஸ் நிலையம் |
| மாலை 4.20 மணி | துத்திப்பட்டு | பஸ் நிலையம் |
| மாலை 4.40 மணி | பெரியவரிகம் | பஸ் நிலையம் |
| மாலை 5.00 மணி | சின்னவரிகம் | பஸ் நிலையம் |
| மாலை 5.20 மணி | கைலாசகிரி | பஸ் நிலையம் |
| மாலை 5.40 மணி | நரியம்பட்டு | ஊர் மத்தியில் |
| மாலை 5.55 மணி | அயித்தம்பட்டு | கோயில் எதிரில் |
| மாலை 6.00 மணி | சாத்தம்பாக்கம் | ஊர் மத்தியில் |
| மாலை 6.20 மணி | பெரிய கொம்மேஸ்வரம் | ஊர் மத்தியில் |
| மாலை 6.40 மணி | சோமலாபுரம் ஊராட்சி | ஊர் மத்தியில் |